
## எங்களைப் பற்றி

மகளிர் மையம் (Women’s Centre) என்பது பெண்களுக்காகப் பெண்களால் நடத்தப்படும் அரசு சாராத, இலாப நோக்கமில்லாத, சமூக அடிப்படையிலான அமைப்பாகும். 1986 -ஆம் ஆண்டு திறக்கப்பட்ட மகளிர் மையம், நியூ சவுத் வேல்ஸ் மற்றும் விக்டோரிய எல்லையின் இருபுறமும் உள்ள பெண்களுக்குச் சேவைகளையும் உதவிகளையும் வழங்குகிறது, அத்துடன் இது ‘ஆல்பரி’யில் (Albury) அமைந்துள்ளது.

16 வயதைக் கடந்த பெண்களை அல்லது பாலியல் அல்லது பாலினம் எப்படியிருந்தாலும் பெண்களாகத் தம்மை அடையாளம் காணும் எந்தவொரு நபரையும் நாங்கள் வரவேற்கிறோம்.

வீட்டு வன்முறை அல்லது குடும்ப வன்முறை அல்லது பாலியல் வன்கொடுமை போன்றவற்றை அனுபவிக்கும் பெண்கள், கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், பழங்குடியினர் (Aboriginal) மற்றும் டோரஸ் நீரிணைத் தீவைச் (Torres Strait Islander) சார்ந்த பெண்கள், அத்துடன் புலம்பெயர்ந்தோர்/கலாச்சார மற்றும் மொழியியல் ரீதியாக வேறுபட்ட பின்னணியைச் சேர்ந்தவர்கள் போன்றவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம்.



**க்யூ.ஆர் குறியீட்டை (QR code) அலகீடு (scanning) செய்வதன் மூலம் நன்கொடை அளிக்கவும்**

## தொடக்க நேரங்கள்

**திங்கள் முதல் வெள்ளி வரை**

**காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை**

**மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை**

Women's Centre
FOR HEALTH & WELLBEING
ALBURY WODONGA
*A place for all Women*
ABN: 85 476 895 526

**அவசரகால நிலைமை என்றால் தயவுசெய்து அழைக்கவும்;**

அவசரகால நிலைமை 000

உயிர்காப்பு இணைப்பு (Lifeline) 13 11 14

‘இன்டச்‘ (Intouch) - குடும்ப வன்முறைக்கு எதிரான பல்கலாச்சார மையம் (விக்டோரியா) 1800 755 988

குடிவரவு ஆலோசனை மற்றும் உரிமைகள் மையம் DV முன்னுரிமை இணைப்பு (02) 8234 0777

**எங்களைத் தொடர்பு கொள்ள**
(02) 6021 5773

**எங்கள் இணையதளம்**
www.womenscentre.org.au

**எங்கள் முகவரி**
526 Swift Street, Albury 2640



Tamil Translation

# Women's Centre for Health & Wellbeing

## Albury Wodonga

## முறைகேடாகப் பயன்படுத்தல் (abuse) என்றால் என்ன?

முறைகேடாகப் பயன்படுத்தப்படும் உறவுமுறையில், ஒரு வாழ்க்கைத்துணையானவர் உடல் ரீதியான தீங்கு, குற்றச்சாட்டுகள், அதிகாரக் கோரிக்கைகள், அச்சுறுத்தல்கள், உடலுறவு வற்புறுத்தல், பாலியல் அழுத்தம், தனிமைப்படுத்தல், நிதிசார்ந்த கட்டுப்பாடு அல்லது விசாவை முறைகேடாகப் பயன்படுத்தல் ஆகியவற்றின் மூலம் மற்றவரை ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கிறார்.

ஒவ்வொரு ஜோடிக்கும் வாக்குவாதம் அல்லது கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஒரு மரியாதையான மற்றும் சமமான உறவுமுறையில், இரு கூட்டாளிகளும் தங்கள் கருத்துக்களைச் சொல்லவும், தங்கள் சொந்த முடிவுகளை எடுக்கவும், தாங்கள் தாங்களாகவே இருக்கவும், மற்றும் உடலுறவு வேண்டாமெனச் சொல்லவும் தயங்கவேண்டியதில்லை.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கும் மற்றும் அவளது குழந்தைகளுக்கும், இந்த நடத்தை மிகவும் ஆபத்தானது, பயமுறுத்தக்கூடியது, குழப்பத்தை உண்டாக்கக்கூடியது மற்றும் சேதத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்

உளவியல், நிதி, விசா அல்லது உணர்ச்சி ரீதியான முறைகேடானது, உடல் ரீதியான முறைகேட்டைப் போலவே தீங்கு விளைவிக்கக்கூடியது.

முறைகேடாகப் பயன்படுத்துவது என்பது மது, அல்லது மன அழுத்தம், அல்லது பாதிக்கப்பட்டவர்களின் நடத்தையால் ஏற்படுவதில்லை. முறைகேடாகப் பயன்படுத்துபவர் மற்ற நபரைக் கட்டுப்படுத்தவும் கையாளவும் விரும்புவதால்தான் முறைகேடு நடக்கிறது. உடல் அல்லது பாலியல் வன்கொடுமை, நிர்ப்பந்தக் கட்டுப்பாடு, அச்சுறுத்தல்கள் மற்றும் பின்தொடர்தல் ஆகியவை ஆஸ்திரேலியாவில் குற்றங்களாகும், அத்துடன் அவற்றைக் காவல்துறைக்குப் புகாரளிக்க வேண்டும்.

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால், உதவி கிடைக்கும்

உங்களுக்கு உதவ மகளிர் மையம் உள்ளது, எங்களை (02) 60215773 என்ற எண்ணில் அழைக்கவும்.

## எங்கள் சேவைகள்

(02) 60215773 என்ற எண்ணில் எங்களை அழைக்கவும் அல்லது ஒரு சந்திப்புக்கான ஏற்பாடு செய்ய அல்லது உதவி பெற, 102/526 ஸ்விஃப்ட் தெரு, ஆல்பரியில் உள்ள எங்கள் அலுவலகத்திற்கு வரவும்.

எங்கள் அனுபவமிக்க குழுவினர் மற்றும் ஆலோசகர்கள், பெண்கள் தங்களுக்கான புகலிடமாகப் பயன்படுத்த ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கித் தருவதற்காகவே இங்குள்ளனர்.

**உள்சேர்க்கை மற்றும் பரிந்துரை**

**ஆலோசனை**

**வட்டியில்லாக் கடன்கள்**

**சிகிச்சைக் குழுக்கள்**

**இலவசச் சட்ட நிலையம்**

**எங்கள் 'சிஸ்டர்ஸ் க்ளோசெட்' (Our Sisters Closet)**

## உங்களை ஆதரித்தல்

அவசரகாலத் தங்குமிடம் தேவைப்படும் பெண்களுக்கு முன்னணி உதவி, வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை, நிர்ப்பந்தக் கட்டுப்பாடு, முறைகேடாகப் பயன்படுத்தல், AVO (வன்முறைத் தடுப்பு உத்தரவுகள்), குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள், தேவையுள்ள பெண்களுக்கு நன்கொடைப் பைகளை வழங்கல் (Share the dignity bags), அத்துடன் மேலும் பலவற்றுக்கான உதவிகளை எங்கள் உள்சேர்க்கை மற்றும் பரிந்துரைச் சேவைகள் வழங்குகின்றன.

ஒருவருக்கு ஒருவர் என்ற முறையில் நாங்கள் நேரடியாக ஆலோசனைச் சேவைகளை மற்றும் சிகிச்சைக் குழுக்களை வழங்குகிறோம். குழுக்கள் வாரத்திற்கு ஒரு முறை என்ற கால அடிப்படையில் நடத்தப்பட்டு 8 வாரங்கள் இயங்கும்.

வருடத்தின் வெவ்வேறு நேரங்களில் கிடைக்கும் வெவ்வேறு குழுக்கள் மற்றும் சேவைகளை எங்கள் கால அட்டவணை காட்டுகிறது.

NILS (வட்டியில்லாக் கடன்கள்) சேவைகள் கிடைக்கும். உங்கள் சந்திப்பு ஏற்பாட்டைச் செய்ய இன்றே தொலைபேசியில் அழைக்கவும்.

AVO, பிரிவினை, குடும்பச் சட்டம், விசாவை முறைகேடாகப் பயன்படுத்தல், சொத்து மற்றும் மேலும் கூடுதலானவற்றில் ஆலோசனை தேவைப்படும் பெண்களுக்கு 'ஹ்யூம் ரிவேரினா' (Hume Riverina) சமூகச் சட்டச் சேவைகளின் நிலையம் ஒன்று உள்ளது.

எங்கள் 'சிஸ்டர்ஸ் க்ளோசெட்' (Sisters Closet) என்பது, பணியிடங்களுக்குத் திரும்ப விரும்பும் பெண்களுக்கு, நேர்காணல்களுக்கோ அல்லது பணியைத் தொடங்குவதற்கோ தேவையான ஆடை இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் இலவசச் சேவையாகும். பணியில் அணியும் ஆடைகள் புதியதாக மற்றும் ஓரளவுக்குப் புதியதாக அனைத்து அளவுகளிலும் சந்திப்பு ஏற்பாடு செய்வதன் மூலம் கிடைக்கும். வீட்டு வன்முறை மற்றும் குடும்ப வன்முறையில் இருந்து தப்பிவரும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கும் நாங்கள் இதை வழங்குகிறோம்.